23.01.2016

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகம், புதுவையில் மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் சனிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். இதே நிலை இன்னும் ஒரு சில தினங்களுக்கு நீடிக்கக் கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை அதிகபட்சமாக 88 டிகிரி ஃபாரன்ஹீட் முதல் 77 டிகிரி ஃபாரன்ஹீட் வரை காணப்படும். அதிகாலை நேரத்தில் சில இடங்களில் மூடுபனி நிலவும் என்று அவர்கள் தெரிவித்தனர். வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்தில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதி ஆகிய இடங்களில் மழை பதிவாகியுள்ளது.

# "மாப்பிள்ளை சம்பா'வின் மகத்துவம் கூறுகிறார் காஞ்சிபுரம் இளைஞர்



பாரம்பரியம் மிக்க "மாப்பிள்ளை சம்பா' நெல் ரகத்தை காஞ்சிபுரத்தில் பட்டதாரி இளைஞர் ஒருவர் பயிர் செய்து வருகிறார். இந்தியாவில் 20,000 பாரம்பரிய நெல் வகைகள் இருந்தன. அவற்றுள் பல, நவீன நெல் ரகங்களின் வரவால் அழிந்துவிட்டன. தற்போது சீரகச் சம்பா, மாப்பிள்ளை சம்பா, காட்டுப் பொன்னி, சின்னப் பொன்னி, பாசுமதி, கிச்சிலி சம்பா உள்ளிட்ட 100 முதல் 150 வகையான நெல் ரகங்கள் மட்டுமே புழக்கத்தில் உள்ளன. அவையும் குறைந்த அளவே பயிரிடப்படுகின்றன. இந்நிலையில், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞரான எழிலன், பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அதன் ஒரு கட்டமாக, "மாப்பிள்ளை சம்பா' நெல் ரகத்தை காஞ்சிபுரத்தை அடுத்த தாமல், கீழ் அம்பி பகுதிகளில் உள்ள தனக்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டுள்ளார்.

இந்த நெல்லை வேதியியல் உரங்கள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தாமல் இயற்கையான முறையில் சாகுபடி செய்கிறார். விவசாயத்தை மீட்பதும், இயற்கை விவசாயத்தில் விவசாயிகளை ஈடுபடுத்துவதும் தான் தனது நோக்கம் என்கிறார் எழிலன். இந்த நெல்லுக்கு மாப்பிள்ளை சம்பா என்ற பெயர் வந்தது குறித்து இவர் கூறும் தகவல் மிகவும் சுவராஸ்யமானது. பழங்காலத்தில் ஒருவனுக்கு பெண் கொடுப்பதற்கு முன்னர் அவர் பலசாலியா என்பதை சோதிப்பதற்காக அதிக எடை கொண்ட இளவட்டக் கல்லைத் தூக்க வேண்டும். அதைத் தூக்கும் இளைஞரை பலமுள்ளவனாகக் கருதி, அவருக்கு பெண்ணை திருமணம் செய்து கொடுப்பர். இந்த ரக அரிசியை சாப்பிடுவர்கள் எளிதில் இளவட்டக் கல்லை தூக்குவார்களாம். இதனால், இதற்கு மாப்பிள்ளை சம்பா என்று பெயர் ஏற்பட்டதாம். இந்த நெல் ரகம் ஆளுயரம் வளர்கிறது. இந்த அரிசியை சாப்பிடுவது நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை தரும் என்றும், அரிசி சாதத்தின் நீராகாரத்தை சாப்பிட்டால் நரம்புகள் பலப்படும் என்றும் வேளாண் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து, காஞ்சி எழிலன் கூறியதாவது:

தற்போது, காஞ்சிபுரம் பகுதியில் மாப்பிள்ளை சம்பா நெல்லை பயிரிட்டுள்ளேன். பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றுக்குப் பதிலாக மீன் அமிலக் கரைசல், பூச்சி விரட்டிக் கரைசல் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறேன். இயற்கை விவசாயத்தில் பாரம்பரிய நெல்லை பயிரிட்டால் தான் அதற்கான பலன்கள் நமக்கு முழுமையாகக் கிடைக்கும். இதுபோன்ற இயற்கை விவசாயத்தையும், பாரம்பரிய நெல் ரகங்களையும் பயிரிடுவதில் விவசாயிகள் பலரை ஈடுபடுத்த உள்ளேன். அவர்களுக்கு இந்த வகை அரிசியையும், காய்கறிகளையும் விற்பனை செய்வதில் சிக்கல் இருக்கும். அதற்காக காஞ்சிபுரம் பகுதியில் ஒரு கடையையும், சென்னையில் 10 கடைகளையும் அமைக்க உள்ளோம்.

இதற்காக, இளைஞர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளோம். எங்களுக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொருத்து, தமிழகம் முழுவதும் இயற்கை விவசாயத்தில் விளைந்த அரிசி, காய்கறிகள் கிடைக்க ஏற்பாடு செய்வோம். இயற்கை விவசாயத்தில் பயிரிடும்போது நம் நிலத்திலேயே அதற்குத் தேவையான பூச்சி விரட்டிச் செடிகள், சத்துகளை அளிக்கும் மூங்கில், பயிர் ஊக்கிகளுக்குத் தேவையான தழைகள் ஆகியவற்றை வரப்போரத்தில் வளர்த்துக் கொள்ளலாம். இயற்கை விவசாயத்துக்குத் தேவையான பொருள்கள் வெளியில் கிடைத்தாலும் அவற்றை வாங்கி பயிரிடும்போது செலவு அதிகமாகும். அதற்குத் தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்து உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படும். விவசாயத்துக்குத் தேவையான அனைத்தையும் நம் நிலத்தில் இருந்தே எடுக்க வேண்டும். ஆட்களுக்கான கூலி தவிர வேறு எதுவும் வெளியில் வாங்கக் கூடாது. அவ்வாறு செய்தால் இயற்கை விவசாயத்திலும் லாபம் பார்க்க முடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் எழிலன்.

## 185 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடு அளிப்பு

பள்ளிப்பட்டு அருகே 4 கிராம ஊராட்சிகளில் 185 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள், கறவை பசுக்கள் வழங்கப்பட்டன.

பள்ளிப்பட்டு ஒன்றியத்துக்கு உள்பட்ட ராமசமுத்திரம், வெங்கடராஜகுப்பம், சாமந்தவாடா, சூராஜ்பட்டை ஆகிய கிராம ஊராட்சிகளில் தமிழக அரசின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சிகள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் செல்லதுரை தலைமை வகித்தார்.

மாவட்ட ஊராட்சி உறுப்பினர் டி.டி.சீனிவாசன், ஒன்றியக் குழுத் தலைவர் சாந்திபிரியா சுரேஷ் ஆகியோர் 135 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளும், 50 பயனாளிகளுக்கு கறவை மாடுகளையும் வழங்கினார்.

## 29-இல் வேளாண் குறைகேட்புக் கூட்டம்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைகேட்புக் கூட்டம் ஜனவரி 29-ஆம் தேதி காலை 11 மணி அளவில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கான குறைகேட்புக் கூட்டம் ஜனவரி 29-ஆம் தேதி காலை 11 முதல் 11.30 மணி வரை ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாயிகள் கலந்து கொண்டு மனு அளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சா.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெ.அக்கண்டராவ் மற்றும் விவசாயிகள், அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், மாவட்டத்தில் வெள்ள நிவாரணத்தை விடுபாடு இன்றி வழங்க வேண்டும். ஏரிகளின் வரத்துக் கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். வனப்பகுதியை ஒட்டியுள்ள பயிர்களுக்கு சோலார் மின்வேலி அமைக்க வேண்டும்.

வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் பேசினர்.

## ஆடு வளர்ப்பில் சாதனை புரிந்த தருமபுரி திருநங்கை!

தமிழக அரசின் விலையில்லா ஆடு வளர்ப்புத் திட்டத்தில் 4 ஆடுகளைப் பெற்ற தருமபுரி திருநங்கை அவற்றை நல்ல முறையில் பராமரித்து தற்போது, 70 ஆடுகளுடன் சாதனைப் பண்ணையாளராக மாறியுள்ளார்.

தமிழக அரசின் விலையில்லா செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 249 கிராமங்களில் 21,830 பயனாளிகளுக்கு ரூ.28.20 கோடியில் 87,320 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் தற்போது 1,44,584 குட்டிகள் ஈன்றெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் கடந்த 2011-ஆம் ஆண்டில் 4 ஆடுகளை வாங்கினார் தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் சோளப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திருநங்கை தனலட்சுமி.

கடந்த நான்கரை ஆண்டுகளில் இவற்றை நல்ல முறையில் பராமரித்து வளர்த்ததால், தற்போது அவரிடம் 70 ஆடுகள் உள்ளன.

"மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறைத் திட்டத்திலிருந்து 3 திருநங்கைகளுக்கு வழங்கப்பட்ட உதவியில் இவர் சிறப்பான கவனம் செலுத்தி வளர்த்ததால் தற்போது இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்' என்கிறார் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் என். சுமதி.

"ஊருக்குள் தனியாக நான் இருந்தாலும், எனது தாய் அவ்வப்போது ஆடுகள் வளர்ப்பில் கூட இருந்து உதவி செய்து வந்தார். அதேபோல, கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்தும் இரு வாரங்களுக்கு ஒரு முறை நேரில் வந்து பார்த்து ஆலோசனை கூறிச் செல்வார்கள்' என்கிறார் திருநங்கை தனலட்சுமி.

தருமபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்றுள்ள திட்டங்கள் குறித்து ஆட்சியர் கே. விவேகானந்தன் கூறியது:

"விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தில் 800 பயனாளிகளுக்கு ரூ.2.86 கோடி மதிப்பில் 16 கிராமங்களில் 800 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டு இவற்றின் மூலம் இதுவரை 1027 கன்றுகள் பிறந்துள்ளன.

கால்நடை வளர்ப்போர் பயனடையும் வகையில், ரூ.7.8 கோடியில் 75,410 பயனாளிகளுக்கு தீவனப்பயிர், விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூ. 6.79 லட்சம் செலவில் 567 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன' என்றார் ஆட்சியர் விவேகானந்தன்.

கால்நடை பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் டாக்டர் கே. ராமலிங்கம் கூறியது:

"தருமபுரி மாவட்டத்தில் 34 கால்நடை மருந்தகங்கள் இருந்தன. கடந்த நான்கரை ஆண்டுகளில் கூடுதல் மருந்தகங்கள் உருவாக்கப்பட்டு தற்போது 67 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ரூ.8.25 கோடியில் நபார்டு திட்டத்தில் 33 கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்களும், தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.45 லட்சத்தில் 3 கால்நடை மருந்தகங்களும் கட்டப்பட்டுள்ளன' என்றார் ராமலிங்கம்.

பண்ணைக்கான கொட்டகை!

சாதனை புரிந்துள்ள திருநங்கை தனலட்சுமிக்கு மத்திய அரசின் நிதியுதவியில் ரூ.1.30 லட்சத்தில் ஆடு வளர்ப்புக்கான கொட்டகை (ஷெட்) அமைக்கப் பரிந்துரை செய்யப்பட்டு அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

மிகவிரைவில் கொட்டகை அமைத்துத் தரப்படும்பட்சத்தில் தனலட்சுமி, கால்நடை வளர்ப்பில் இன்னும் கூடுதலான சாதனைகளை எட்டுவார் எனக் கருதப்படுகிறது.

## குளங்கள், வரத்துவாரிகளை சீரமைக்க ரூ. 14.9 கோடியில் திட்டம்

புதுகை நகராட்சிக்குள்பட்ட குளங்கள்,வரத்துவாரிகளைச் சீரமைக்க ரூ.14.9 கோடி மதிப்பில் திட்டமிட்டுள்ளதாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற நகர்மன்றக் கூட்டத்தில் நகர்மன்றத் தலைவர் தெரிவித்தார்.

புதுகை நகராட்சியின் நகர்மன்றக் கூட்டம் அதன் தலைவர் ரா. ராஜசேகரன் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையர் (பொ) ஜெ. சுப்பிரமணியன், துணைத் தலைவர் எஸ். அப்துல் ரகுமான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் பின்வருமாறு:

நகர்மன்றத் துணை தலைவர்: தெற்கு ராஜ வீதி, தெற்கு 2,3,4 ஆகிய நான்கு இடங்களில் கன மழை பெய்தபோது வெள்ள நீரை வெளியேற்ற சாலையில் குறுக்கே வெட்டி வடிக்கப்பட்டது. இதையடுத்து,அப்பகுதிகளில் பெரிய அளவில் பள்ளம் ஏற்பட்டுள்ளது. இதை சீரமைத்துத் தரக்கோரி, ஆணையர், நகர்மன்றத் தலைவர் ஆகியோரின் கவனத்துக்கு பல முறை கொண்டு சென்றும் இதுவரையில் சரிசெய்யப்படவில்லை. அப்பகுதி மக்கள் இதுகுறித்து தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றனர் என்றார்.

இதற்கு,பதிலளித்த நகர்மன்றத் தலைவர்,உரிய நிதி பெற்று விரைந்து சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், புதுகை

நகராட்சிக்குள்பட்ட குளங்கள்,அதற்கான வரத்துவாரிகள் ஆகியவைகளைச் சீரமைக்க ரூ.14.9 கோடி மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களிடம் துணைத்தலைவர் எடுத்துக் கூற வேண்டும் என்றார்.

இப்ராகிம் பாபு (காங்): தலைவர், துணைத் தலைவரின் ஆகியோரது வாதங்களைப் பார்க்கும்போது போதிய ஒருங்கிணைப்பு இல்லை என்பதுபோல் தெரிகிறது. நகர்மன்றத்தில் ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான விவாதங்கள் நடக்க வேண்டும். உறுப்பினர்கள் கேள்விக்கு தலைவர் நேரடியாக பதில் தரவேண்டும். மக்களின் சிரமங்கள் நீடிக்கக் கூடாது என்றார்.

அறிவுடைநம்பி(திமுக): வார்டுகளுக்கு தலைவர் ஆய்வுக்கு செல்லும்போது அந்த வார்டு கவுன்சிலரை அழைத்து செல்ல வேண்டும். மேலும், அம்மா மருத்தகம் விற்பனையில் நகராட்சிக்கு எந்த பயனும் இல்லாதபோது ஏன் நகராட்சி,ரூ.2 லட்சத்து 35 ஆயிரம் நிதி செலவு செய்ய வேண்டும் என்று வினா எழுப்பினார்.

ஏ. இப்ராகிம்பாபு(காங்): காந்தி பூங்காவில் அனைத்து தினசரி பத்திரிகைகளும் பொதுமக்கள் படிப்பதற்காக வாங்கப்பட்டு வந்தது. தற்போது தனியார் பராமரிப்பில் அதெல்லாம் இல்லை.

நகராட்சி தலைவர்: காந்தி பூங்கா நிதி ஒதுக்கி மேம்படுத்தப்படும். மேற்கண்டவாறு விவாதம் நடைபெற்றது. முடிவில்,61 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பண்ணைப் பசுமைக் கடையில் ரூ. 92 ஆயிரத்துக்கு காய்கறிகள் விற்பனை**

தஞ்சாவூரில் பண்ணைப் பசுமைக் கடையில் இதுவரை ரூ. 92,000-க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின் கீழ், தஞ்சாவூரில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் மூலம் ஏழை, நடுத்தர மக்கள் பயன் பெறும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையை முதல்வர் காணொலி காட்சி மூலம் கடந்த 11-ம் தேதி திறந்து வைத்தார்.

இந்தக் கடையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ. 25-க்கும், சின்ன வெங்காயம் கிலோ ரூ. 40-க்கும், தக்காளி கிலோ ரூ. 30-க்கும், உருளைக் கிழங்கு கிலோ ரூ. 20-க்கும், பச்சை மிளகாய் கிலோ ரூ. 35-க்கும் என அனைத்து காய்கறிகளும் குறைவான விலையில் விற்கப்படுகிறது.

இந்தப் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடையின் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 8000-க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. இதுவரை சுமார் ரூ. 92,000 மதிப்பில் பசுமையான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 433 நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா நெல் கொள்முதல் செய்ய 433 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருவாரூர் வட்டத்தில் 29, நன்னிலம் வட்டத்தில் 46, குடவாசல் வட்டத்தில் 80, வலங்கைமான் வட்டத்தில் 56, மன்னார்குடி வட்டத்தில் 112, நீடாமங்கலம் வட்டத்தில் 54, திருத்துறைப்பூண்டி வட்டத்தில் 56 என மொத்தம் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் நலன் கருதி நெல்லின் ஈரப்பதம் 17 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை தளர்வு செய்து அதற்கான பிடித்தம் செய்து கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள் விற்பனை செய்யும் நெல்லுக்கான தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் ஏற்படும் சிரமங்கள் குறித்து புகார் தெரிவிக்க திருவாரூர் துணை மேலாளர் 9942381285, மன்னார்குடி துணை மேலாளர் 9626010902, மேலாளர் (தரக்கட்டுப்பாடு) 9443336200, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் 9442255542 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## மணிலா மகசூல் அதிகரிக்க நுண்ணூட்டச் சத்து அவசியம்: வேளாண் துறை அறிவுறுத்தல்

மணிலாவில் மகசூல் அதிகரிக்க நுண்ணூட்டச் சத்து அவசியம் என்று வேளாண்மைத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மணிலா பயிருக்கு தழை, மணி, சாம்பல் சத்துக்களைத் தவிர மிக குறைந்த அளவில் போரான், துத்தநாகம், இரும்பு தாமிரம், மாங்கனீஸ் மற்றும் மாலிப்டீனம் போன்ற 6 வகை நுண்ணூட்டச் சத்துக்களும் அவசியம். இவை குறைந்த அளவில் தேவைப்பட்டாலும் இவற்றை பயிருக்கு அளிக்காவிட்டால் மகசூல் இழப்பு ஏற்படும். ஒரே பயிரை திரும்ப, திரும்ப பயிர் செய்வதால் இந்தச் சத்துக்கள் மண்ணில் இல்லாமல் போகின்றன. மேலும், சுண்ணாம்புத் தன்மை உள்ள நிலங்களில் இச்சத்துக்களை பயிர் எடுத்துக் கொள்ள முடியாத நிலை உள்ளது. இதனால், நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை ஏற்படுகிறது.

நுண்ணூட்டச் சத்துப் பற்றாக்குறையை சில அறிகுறிகளின் மூலமாக தெரிந்துகொள்ளலாம். அதன்படி மஞ்சள் மற்றும் வெளிர் பச்சை நிறப்பட்டைகள் நீளவாக்கில் இலை முழுவதும் தென்படும். நடுநரம்பு தவிர்த்து மற்ற இடங்களில் மஞ்சள் நிறமாக மாறி இருக்கும். இலைகள் சிறுத்து இலை ஓரம் மேல்நோக்கி வளைந்து கிண்ணம்போல் காட்சியளிக்கும். இலைகள் வெளிரி உள்பக்கம் சுருண்டு காணப்படும். இலைகள் நடுநரம்பைச் சுற்றி திட்டுத் திட்டாக பச்சை, மஞ்சள் நிறங்கள் மாறி, மாறி காணப்படும். மணிலா பருப்பில் நடுவில் பள்ளம் ஏற்பட்டு பயிருக்கு சேதம் ஏற்படும்.

எனவே, ஏக்கருக்கு மணிலா நுண்ணூட்ட கலவை 5 கிலோவுடன், காய்ந்த மணல் 20 கிலோ எடுத்து நன்றாக கலந்து அடியுரமாக சீராக தூவ வேண்டும். தூவிய பிறகு மண்ணை கிளறக் கூடாது. ஏனெனில் கிளறினால் சத்துக்கள் அடியில் போய் செடிக்கு கிடைக்காமல் போகலாம். அடியுரமாக போடி முடியாத சூழ்நிலையில் மண்ணில் ஈரம் இருக்கும் போது மேலுரமாகவும் இடலாம். எனவே, மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் நுண்ணூட்டச் சத்து இடுவது அவசியம் என்று அதில் தெரிவித்துள்ளார்.

## பெரிய ஏரிகளின் நீர் மேலாண்மை

இப்பூவுலகில் ஆறறிவு படைத்த மனிதனைத் தவிர வேறெந்த ஜீவராசியும் தமது தேவைக்குப் போக மிகும் நீரினை சேகரித்து வைப்பதில்லை. ஆனாலும் என்ன பயன்? கிடைக்கின்ற மழை நீரை முழுமையாகத் தேக்கிவைத்துப் பயன்படுத்திக் கொள்ளும் அளவில் அறிவியல் பூர்வமாக மக்களாலும், அரசுகளாலும் சிந்தித்துச் செயல்பட இயலவில்லை. உதாரணமாக, சென்னையில் பெய்யும் மழைநீரை முழுமையாகப் பயன்படுத்தி மக்களும் அரசும் மழைநீர் அறுவடையில் (Rainwater Harvest) தீவிர கவனம் செலுத்தினால் இனிவரும் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைக் குறைத்து பிரச்னைகள் அதிகம் இன்றி சமாளிக்க முடியும். நல்ல மழை பெய்துவிட்டால், நீர்ப் பிரச்னைகள் பற்றிய உணர்வு அப்படியே குறைந்து போய்விடுகிறது. எக்காலத்திலும் தண்ணீர்ப் பிரச்னை மற்றும் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துச் செயல்படலாம் என்பதில் அரசு தீவிரக் கவனம் செலுத்தினால் மக்கள் சந்தித்து வரும் பேரளவு பிரச்னைகளை சுலபமாகத் தீர்க்கலாம். நவம்பர் 16 முதல் டிசம்பர் 2 வரையான 16 நாள்கள் சென்னையின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் துவக்கிவிட்டது. இக்குறுகிய நாள்களில் சென்னையில் 1067 மி.மீ. மழை பெய்துள்ளது. இதன் விளைவாக மிகக் கடுமையான பாதிப்புகளை மக்கள் சந்திக்கும் நிலை உருவானது.

இப்பாதிப்புகளுக்குள்ளான காரணங்களில் முக்கியமானதாக சென்னையின் அருகே உள்ள செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்து விடப்பட்ட உபரி நீர் என கருதப்பட்டது. செம்பரம்பாக்கம் ஏரி ஒரு மிகப்பெரிய நீர்ப்பாசன ஏரியாகும். தமிழகத்தின் மிகப்பெரிய ஏரியான வீராணம் ஏரிக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய ஏரி இது. கடந்த 1983-ஆம் ஆண்டில் தமிழக நில உடைமைப் பதிவு ஆவணங்களின்படி செம்பரம்பாக்கம் ஏரியின் பதிவு செய்யப்பட்ட பாசன நிலம் ஏறத்தாழ 12,500 ஏக்கர் ஆகும். இவை அந்த ஏரியின் மூலம் பாசனம் பெறும் 38 கிராமங்களுக்குக் கட்டுப்பட்டதாகும். இந்நிலங்களிலிருந்து, நெல், கொடிக்கால், வாழை போன்ற நீர்த்தேவை மிகுந்த நன்செய் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. ஆனால், 2010-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, தற்போது செம்பரம்பாக்கம் ஏரி 13 கிராமங்களுக்கு மட்டும், அதுவும் ஒரு பகுதி நகரங்களுக்கு மட்டும் பாசனம் அளிப்பதாகவும் மீதமுள்ள நிலங்கள் சென்னை மாநகரின் விரிவாக்கத்தால் நகர்ப்புற வீட்டுமனைகளாக மாறிவிட்டதாகவும் அறியப்பட்டது. இன்னும் 10 ஆண்டுகளுக்குள் இந்த ஏரியின் அனைத்து கிராம நிலங்களும் முழுமையாக சென்னை மாநகரின் விரிவாக்கத்திற்குள்ளாகி விடும் என உறுதியாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். ஏனெனில் 1 ஏக்கர் விவசாய நிலம் ரூ.1 கோடிக்குமேல் மதிப்புள்ளதாக இருப்பதால் விவசாய வருமானம் இவ்விலையின் முன் ஒருசிறிதும் எடுபடாத ஒன்றாக உள்ளது. இச்சூழ்நிலையில் கடந்த 10-20 ஆண்டுகளாக சென்னையின் குடிநீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக இருந்ததால், சிறிது சிறிதாக இச் செம்பரம்பாக்கம் வேளாண் ஏரியை சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமாக மாற்ற அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு தற்போது அதில் முழு வெற்றி கண்டது. இதனால், மிகப்பெரிய விவசாய ஏரி சென்னையின் குடிநீர் ஏரியாக மாறிவிட்டது. தற்போது 80 லட்சத்துக்குமேல் மக்கள் தொகை கொண்ட சென்னை, விரைவில் ஒரு கோடியை தொட்டுவிடும். இம்மக்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும்

மற்றும் பல்வேறு பணிகளுக்கும் தேவையான நீரை வழங்க தற்போது செம்பரம்பாக்கம் ஏரி முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போது, சென்னையின் குடிநீர் ஏரிகளில் முதலாவதாக செம்பரம்பாக்கம் ஏரியும் (கொள்ளளவு 3.64 டிஎம்சி), இரண்டாவதாக பூண்டியும் (3.23 டிஎம்சி), மூன்றாவதாக செங்குன்றம் எனப்படும் புழல் ஏரியும் (3.3 டிஎம்சி), இறுதியாக சோழவரம் (0.88 டிஎம்சி) ஏரியும் உள்ளது. சென்னைக்கு இந்த செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மூன்றரை மாதங்களுக்குப் போதுமானதாகும். இந்த ஏரியின் ஆழம் 24 அடி. இந்த ஏரியின் நீர் நிர்வாகம் அரசின் பொதுப்பணித்துறை அதிகாரி மூலம் தமிழகத்திலுள்ள மற்ற பெரிய ஏரிகள் எப்படி நிர்வகிக்கப்படுகின்றதோ அதே முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மிக முக்கியமாக, தற்போது தமிழகத்தில் 41,127 ஏரிகள் உள்ளன. இவைகளின் மொத்த பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பு 25 லட்சம் ஏக்கர். இவற்றுள் 100 ஏக்கருக்கு மேல் பாசனம் பெறும் ஏரிகள் 7985 மற்றும் 100 ஏக்கருக்கு கீழ் பாசனம் பெறும் ஏரிகள் 33,142 உள்ளன. இந்த ஏரிகளில் செம்பரம்பாக்கம் ஏரியும் ஒன்று. நீர்ப்பாசன ஏரியாக இருந்து குடிநீர்த் தேவைக்காக மாற்றப்பட்ட இந்த செம்பரம்பாக்கம் ஏரி மட்டும் அரசின் சிறப்பு நிதிமூலம் பலப்படுத்தப்பட்டு, இதன் இயற்கையான கொள்ளளவான 3,120 மில்லியன் கன அடியிலிருந்து தற்போது 3,645 மில்லியன் கன அடியாக இதன் கொள்ளளவு அதிகரிக்கப் பட்டுள்ளது. தமிழக ஏரிகள் அனைத்தும் பெரும்பாலும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையான 3 மாதத்திற்குள் பெய்யும் வடகிழக்குப் பருவமழையால் நிரம்பும் தன்மையுடையன. ஏரிகளில் வானம்பார்த்த ஏரிகள், சங்கிலித் தொடர் ஏரிகள், ஆறுகள் மற்றும் அணைகளிலிருந்து நீர் பெறுபவை என பல வகைகள் உள்ளன. மேலும், பல்லாயிரக்கணக்கான ஏக்கருக்கு பாசனம் அளிக்கும் வகையில், பல விவசாய கிராமங்களை உள்ளடக்கிய பெரிய ஏரிகளைப் பராமரித்து நிர்வாகம் செய்வதற்காக பழங்காலத்திலிருந்தே சிறந்த முறையில்

விதிமுறைகள் வகுக்கப்பட்டு அந்த விதிமுறைகளின் தொகுப்பு மாமூல் நாமா என்ற பெயரில் சிறந்த ஆவணமாக தற்போது விளங்குகிறது. இந்த மாமூல்நாமாவின்படி பல கிராமங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் பெரிய ஏரிகளில் நீர் மேலாண்மையைக் கையாளும்போது, அந்த பெரிய ஏரிகளில் டிசம்பர் 15-ஆம் தேதி வரை அந்தந்த பெரிய ஏரிகளின் முழுக் கொள்ளளவு உயரத்தில் 1 அடி குறைவாகவே நீரின் அளவு பராமரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாகக் கூறினால், கீழ்க்கண்ட விதி செம்பரம்பாக்கம் உள்பட இன்னும் பெரும்பாலான ஏரிகளில் இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கலங்கல் மதகுகள் மிகமுக்கிய தருணங்களில் டிசம்பர் முதல் தேதியிலிருந்து பொதுப்பணித்துறை அதிகாரியின் உத்தரவின்படி திறந்து விடப்படவேண்டும். இக்கலங்கள் மதகுகள் ஏரிகளுக்கு வரும் நீர்வரத்து, தொடர்வது நிற்கும் வரை திறந்தே இருக்கவேண்டும். இதன் மூலம் ஏரிகளில் சேமிக்கப்பட்டுள்ள நீர் அளவு தொடர்ந்து பராமரிக்கப்படவேண்டும்.

டிசம்பர் 15-க்குப் பிறகு வடகிழக்குப் பருவமழை அளவு பொதுவாக குறைந்துவிடுவதால் அதன்பின் அனைத்து ஏரிகளின் கலங்கள் மதகுகளையும் முழுமையாக மூடிவிடவேண்டும் என பொதுவான ஏரிகளின் நீர்பராமரிப்பு விதி உள்ளது. இவ்விதி சென்னையிலிருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ள காவேரிப்பாக்கம் ஏரி நீர் பராமரிப்பிலும் இன்றளவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நவம்பர் 1, 2015 முதல் ஜனவரி 11, 2016 வரையான 72 நாள்களில் செம்பரம்பாக்கம் ஏரியின் மழையளவு, நீர்வரத்து, நீர் இருப்பு, நீர் வெளியேற்றம் பற்றிய ஆய்விலிருந்து தெரிவதாவது: ஏரியின் முழு நீர்மட்ட அளவான 85.40 அடியின் முழு கொள்ளளவான 3645 மில்லியன் கன அடி இந்த ஆண்டு எட்டப்படவில்லை. அதிகபட்ச நீர்மட்டமாக 84.47 அடி (3396 மி.கன அடி) நீர்த்தேக்கம் டிசம்பர் 2, 2015-ல் பதிவாகியுள்ளது. மிக அதிக நீர்வரத்து, நீர் வெளியேற்றத்தைப் பொறுத்தவரை நவம்பர் 17, 2015-ல்

நீர்வரத்து 12,000 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 18,000 கன அடியாகவும் இருந்துள்ளது. அதேபோல், டிசம்பர் 2, 2015-இல் நீர்வரத்து 26,000 கன அடியாகவும் நீர் வெளியேற்றம் 29,000 கன அடியாகவும் பதிவாகியுள்ளது. 4. நவம்பர் 17, 2015 முதல் டிசம்பர் 10, 2015 வரையான 23 நாள்களில் மழைநீர் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தொடர்ந்து தினமும் வெளியேற்றப்பட்டு ஏறத்தாழ 9700 மி. கன அடி நீர் (9.7 டி.எம்.சி.) கடலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது சென்னைக்கு 9 மாதங்களுக்குப் போதுமான குடிநீராகும். செம்பரம்பாக்கம் ஏரியின் கரைகள் மிகவும் வலுவாக இருப்பதால் ஏரியின் கொள்ளளவு கூறப்பட்டுள்ள ஏரியின் பராமரிப்பு விதிகளின்படி, சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. டிசம்பர் 15க்குப்பின் முழுமையாக ஏரியின் கலங்கள் மூடப்படவேண்டும் என்ற விதி இருந்தாலும் டிசம்பர் 11 முதல் இன்றுவரை மழையின்மையால் ஏரி முழு கொள்ளவான 85.40 அடியை இன்னும் எட்டவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டும். இதனால், ஒட்டுமொத்த கொள்ளளவில் ஏறத்தாழ 250 மி.க.அடி அளவு நீர் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், இது ஏரிகள் பராமரிப்பு விதிகளின்படி தவிர்க்க இயலாததாகும். மேலும், சென்னையில் அதிகபட்சமாக டிசம்பர் 1, 2015-இல் பெய்த மழை 475 மி.மீ. மட்டுமே. ஆனால் ஜுலை 27, 2005-இல் மும்பையில் ஒரே நாளில் 995 மி.மீ. மழை பெய்தது. ஆகவே, மழைத் தெய்வம் சென்னை மக்கள் மேல் பேரளவு சீற்றத்தைக் காண்பிக்கவில்லை. மேற்கூறப்பட்ட உண்மை நிலவரங்களிலிருந்து அறியவேண்டியது மக்களும், அரசும் ஏரியிலிருந்து திறந்து விடப்படும் உபரி நீர் செல்லும் கால்வாய்கள், ஆறுகளை ஆக்கிரமிப்பு செய்யாமல் அதனதன் உரிய அளவில் பாதுகாக்க வேண்டும். இல்லையெனில், மிகச் சிறப்பாக ஏரி நீரினை,செம்பரம்பாக்கம் ஏரியைப்போல் பராமரிப்பு செய்தாலும் மக்களுக்கும் அரசுக்கும் ஏற்படும் பாதிப்புகள் தற்போது ஏற்பட்டதுபோல்

இயற்கையின் சீற்றத்தால் மிகக் கடுமையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கட்டுரையாளர்:

பேராசிரியர்.

தமிழக நில உடைமைப் பதிவு ஆவணங்களின்படி செம்பரம்பாக்கம் ஏரியின் பதிவு செய்யப்பட்ட பாசன நிலம் ஏறத்தாழ 12,500 ஏக்கர்.

## கொய்யா இலை இருக்க கவலை ஏன்?

கொய்யா இலைகளை கொதி நீரில் போட்டு கஷாயமாக்கிக் குடித்தால், உதிரப் போக்கு தடைபடும். மேலும் கொய்யா இலை கஷாயத்தை தினமும் வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தைராய்டு சுரப்பு சமநிலைக்கு வரும்.

கொய்யாப் பழம் மலச்சிக்கலைப் போக்கும். கொய்யா இலை கஷாயம் வாந்தி-பேதியைத் தடுக்கும். ஈறுகளில் வீக்கம் ஏற்பட்டால் கொய்யா இலையைக் காய்ச்சி கொப்பளிக்கலாம்.

கொய்யா இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் இருமல், தொண்டை மற்றும் இதய சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு தருகின்றன.

கொய்யா மரத்தின் இளம், புதுக் கிளைகளின் இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.

கொய்யா இலைகளை வாயில் போட்டு மென்றால், வயிற்றுப் புண், பல் வலி நீங்கும்.

## நீர்க்கடுப்பை நீக்கும் சிறிய வெங்காயம்

வெங்காயம் இல்லாமல் சமையலே கிடையாது எனும் அளவுக்கு அனைத்து வகை சமையலிலும் வெங்காயம் முக்கிய இடம் பிடிக்கிறது.

தண்ணீர் அதிகம் குடிக்காமல் வெயிலில் வெகுநேரம் அலைந்து திரிபவர்களுக்கு நீர்க்கடுப்பு பாதிப்பு ஏற்படும். இவர்கள், ஒரு சிறிய வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி, அதை ஒரு டம்ளர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைக் குடித்தால் நீர்க்கடுப்பு உடனே நின்றுவிடும். சிறிய வெங்காயத்தை தண்ணீரில் போட்டு கொதிக்க வைக்கும் அளவுக்கு பொறுமை இல்லாதவர்கள், அப்படியே பச்சையாகச் சாப்பிடலாம்.

சில நிமிஷங்களிலேயே நீர்க்கடுப்பு காணாமல் போய்விடும். வெயில் காலத்தில் சிலருக்கு உடலில் கட்டிகள் தோன்றும். இதற்கு, சிறிய வெங்காயத்தை நசுக்கி, சாறு பிழிந்து கட்டிகள் உள்ள இடங்களில் தடவி வந்தால் வெகு விரைவில் நிவாரணம் கிடைக்கும். சிறிய வெங்காயத்தை துண்டுகளாக்கி பசு நெய்யில் வதக்கிச் சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.

இன்றைய வேளாண் செய்திகள்

## அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் கலெக்டர் உத்தரவு:விவசாயிகள் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க



மதுரை;'கண்மாய்கள், கால்வாய்கள் துார்வாரப்படாததாலும், பெரியாறு வைகை அணையிலிருந்து தாமதமாக திறந்ததாலும், கடைமடை பகுதி வரை பாசனத்திற்கு தண்ணீர் சேரவில்லை. சேதம்அடைந்த பயிர்களுக்கு காப்பீடு வழங்கவில்லை,' என, மதுரையில் நேற்று நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் குற்றம்சாட்டினர்.விவசாயிகள் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்திய கலெக்டர் கே.வீரராகவராவ், "நடவடிக்கை எடுத்தால் மட்டுமே மனுக்களை முடித்ததாக கருத வேண்டும்," என்றார்.

கூட்ட விவாதங்கள் வருமாறு:பாண்டியன், திருமங்கலம்: பேரையூர் பகுதியில் நெல் பயிர்கள் அறுவடைக்கு தயாராகவுள்ளன. நெல்

கொள்முதல் மையங்களை திறக்க வேண்டும். வைகையில் உபரிநீரை உசிலம்பட்டி அருகேவுள்ள 58 கிராம விவசாயிகள் பயன்பெற 58 கால்வாய் திட்டம் கொண்டு வரப்பட்டது. இன்னும் நிறைவேற்றாமல் இழுபறியில் உள்ளது.ராஜமாணிக்கம், மதுரை: பெரியாறு, வைகை அணையிலிருந்து விவசாயத்திற்கு கூடுதலாக எத்தனை நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என உறுதி செய்ய வேண்டும்.

அழகு, பனையூர்: கண்மாய், வரத்து கால்வாய்கள் முழுமையாக துார்வாரப்படாததால், வடகிழக்கு பருவ மழையின் போது தண்ணீர் தேக்க முடியவில்லை. துார்வார வேண்டும்.

பழனிச்சாமி, கரும்பு விவசாயிகள் சங்க தலைவர்: பெரியாறு, வைகை அணையில் போதிய தண்ணீர் இருந்தும்கூட, டிசம்பரில் தான் பாசனத்திற்கு திறந்தனர். 12வது கால்வாய் கடைமடை பகுதிக்கு தண்ணீர் செல்லவில்லை. அலங்காநல்லுார் தேசிய சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு ரூ.ஒன்றரை கோடி பாக்கித் தொகையை வழங்க உத்தரவிட வேண்டும்.

மணிகண்டன், நன்செய், புன்செய் விவசாயிகள் சங்க தலைவர்: உசிலம்பட்டி 58 கால்வாய் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

ராமன், முதலைக்குளம் எட்டூர் கிராம முன்னேற்ற கமிட்டி: 2014-15ல் நெற்பயிர்கள் தண்ணீரின்றி பாதிக்கப்பட்டன. அதற்காக காப்பீடு செய்த விவசாயிகளுக்கு நிவாரணம் செல்லம்பட்டி,

உசிலம்பட்டி வட்டாரங்களில் வழங்கப்படவில்லை.கணேசன், பா.பி., விவசாய பிரிவு செயலாளர்: 1998ல் கொண்டு வரப்பட்ட உசிலம்பட்டி 58 கிராம கால்வாய் திட்டம் இன்றும் இழுபறியாகவுள்ளது. இதனால் அப்பகுதியில் தொடர்ந்து வறட்சி நிலவுகிறது. திட்டத்தின் முக்கியத்துவம் கருதி நிறைவேற்ற வேண்டும்.

தேவராஜ், விவசாயிகள் சங்க செயலாளர்: பன்றிகளால் பயிர்கள் சேதமாகின்றன. இவற்றை கட்டுப்படுத்த உத்தரவிட வேண்டும்.

கதிரேசன், கரும்பு விவசாயிகள் சங்க நிர்வாகி: பெரியாறு, வைகை பாசன தண்ணீர் விநியோகத்தில் முறைகேடு நடந்தது. இதனால் தான் கடைமடை பகுதிக்கு தண்ணீர் போய் சேரவில்லை. கடைமடை பகுதிக்கு தண்ணீர் திறக்க வேண்டும்.

ஜெயபாண்டி, பேரையூர் தாலுகா விவசாயிகள் சங்கம்: மேற்கு தொடர்ச்சி மலை எத்திலாமலையில் காட்டுப்பன்றிகள் அதிகம் உள்ளன. அவை விவசாய பயிர்களை சேதப்படுத்துகின்றன.

பார்த்தசாரதி, பாரதீய கிசான் சங்கம்: சீமை கருவேல மரங்களை முற்றிலும் அழிக்க வேண்டும்.

முருகன், மேலூர் ஒரு போக பாசன விவசாயிகள் சங்க தலைவர்: மேலூர் பகுதியில் நேரடி கொள்முதல் மையங்களை திறக்க வேண்டும்.பொதுப்பணித்துறை செயற் பொறியாளர்: கடைமடை பகுதிக்கு தண்ணீர் 55 நாட்களுக்கு திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள்: அவ்வளவு

நாட்களுக்கு தண்ணீர் திறக்க வாய்ப்புகள் இல்லை.

முத்துபேயாண்டி: நுாறு நாள் வேலை திட்டத்தில் விவசாயிகளுக்கு வேலை வழங்க வேண்டும்.

கலெக்டர்: விவசாயிகள் புகார் மனுக்கள் மீது முழுமையாக நடவடிக்கை எடுத்த பிறகு தான் மனுக்களை முடித்ததாக கருத வேண்டும். கண்மாய், வரத்து கால்வாய்கள் துார் வாருவது குறித்து அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் கேள்விகளுக்கு சரியான பதில்களை அதிகாரிகள் தர வேண்டும். நுாறு நாள் வேலை திட்டத்தில், விவசாயிகளுக்கு வேலை

வழங்க அரசு உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி வேலை வாய்ப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் சீமை கருவேல மரங்களை அகற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும்.டி.ஆர்.ஓ., வேலுச்சாமி, வேளாண் இணை இயக்குனர்

கனகராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) தனுஷ்கோடி, கூட்டுறவு இணை பதிவாளர் வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

பாலிதீனை தவிர்க்கவேண்டுகோள்:பொறுப்பேற்ற உடன் குறைதீர்க்கும் கூட்டத்தில் முதல் முறையாக பங்கேற்ற கலெக்டருக்கு விவசாயிகள் வாழ்த்து தெரிவித்தனர். விவசாயி ஒருவர் 'பொக்கே' கொடுத்தார். அதிலிருந்த பாலிதீனை சுட்டிகாட்டிய கலெக்டர், "பாலிதீன் உபயோகத்தை விவசாயிகள் குறைக்க வேண்டும். பாலிதீன் இயற்கைக்கு எதிரி. பாலிதீன் இல்லா மதுரை மாவட்டம் உருவாக ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்," என்றார்.

## 29ல் வேளாண் குறைதீர் கூட்டம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட வேளாண் குறைதீர் கூட்டம், ஈரோடு கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் வரும், 29ம் தேதி, கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடக்க உள்ளது. அன்று காலை, 11 முதல், 11.30 மணி வரை மனுக்கள் பெறுதலும், 11.30 முதல், 12.30 மணி வரை, விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான பிரச்னைகள், கருத்துக்களை தெரிவிக்கவும், 12.30 முதல், 1.30 மணி வரை பிரச்னைகள் தொடர்பாக அதிகாரிகள் விளக்கம் தெரிவிப்பார்கள். இக்கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் பிரச்னைகள், கருத்துக்களை தெரிவித்து பயன்பெறலாம்.

## ஒருங்கிணைந்த விவசாய முறை மூலம் கூடுதல் வருவாய்

ஊட்டி: 'ஒருங்கிணைந்த விவசாய முறை மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும்' என, தெரிவிக்கப்பட்டது.

'எனது கிராமம், எனது பெருமை' திட்டத்தின் கீழ், இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு நிறுவனத்தின் ஊட்டி மையம் சார்பில், நீலகிரி ஆதிவாசி நலச்சங்கத்துடன் இணைந்து, கடசோலை கிராமத்தில், திறன் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்பட்டது. மத்திய மண், நீர் வள பாதுகாப்பு நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானி சுந்தராம்பாள் வரவேற்றார். நீலகிரி ஆதிவாசி நலச்சங்க செயலர் ஆல்வாஸ், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசுகையில்,“பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக உபாசி, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறை, இந்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன,” என்றார்.

அமைப்பின் கள ஒருங்கிணைப்பாளர் பாலசுப்ரமணியம் பேசுகையில்,“ஒருங்கிணைந்த பண்ணை முறையை கையாண்டு, விவசாயம் மட்டுமல்லாமல், ஆடு, மாடு வளர்ப்பிலும் விவசாயிகள் ஈடுபட வேண்டும்; அதன் மூலம் கூடுதல் வருவாய் பெற முடியும்,” என்றார்.

அமைப்பின் ஆலோசகர் ராஜ்குமார் பேசுகையில், “விவசாயிகள், குழுக்களாக செயல்படுவதன் மூலம், அவர்களது தேவைகளை, எளிதாக பூர்த்தி செய்து கொள்ள முடியும். வளர்ச்சி திட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்ட வசதிகளை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்,” என்றார்.

## விவசாய பொருட்கள் உற்பத்தி: முக்கியத்துவம் தருவதாக உறுதி

கரூர்: கரூர் மாவட்டத்தில், விவசாய பொருட்கள் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்தார். கரூர் மாவட்ட கலெக்டராக பணியாற்றி வந்த ஜெயந்தி, திருப்பூர் மாவட்ட கலெக்டராக கடந்த, 20ம் தேதி இடமாற்றம் செய்யப்பட்டார். இதையடுத்து, கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டராக பணியாற்றி வந்த ராஜேஷ், கரூர் மாவட்ட கலெக்டராக இடம்மாற்றம் செய்யப்பட்டார். நேற்று காலை, 9 மணிக்கு கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், ராஜேஷ் பொறுப்பேற்று கொண்டார். அவருக்கு, டி.ஆர்.ஓ., அருணா உள்ளிட்ட பல்வேறு அரசு துறையை சேர்ந்த அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

பின், கலெக்டர் ராஜேஷ் நிருபர்களிடம் கூறியதாவது: கரூர் மாவட்டத்தில், கிராமப்புறங்களில் உள்ள பிரச்னைகளை தீர்க்கப்படும். குறிப்பாக, காவிரி, அமராவதி ஆறுகள் ஓடும் கரூர் மாவட்டத்தில், விவசாய விளைபொருட்களின் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும். குடிநீர் பிரச்னையை முழுமையாக தீர்க்க முடியும். விவசாயத்துக்கு நீர்நிலைகளின் தேவை மிகவும் முக்கியம். இதனால், நீர் நிலைகளில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றப்படும். அதே போல், ஆக்கிரமிப்புகளும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அரசின் அனைத்து திட்டங்களும், மக்களை சென்று அடையும் நோக்கில், தனி கவனம் செலுத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## புளியமரங்களில் காய்ப்புத்தன்மை அதிகரிப்பு

ஆண்டிபட்டி;ஆண்டிபட்டி பகுதியில் ரோட்டின் ஓரங்களில் உள்ள புளிய மரங்களில் இந்தாண்டு காய்ப்புத்தன்மை அதிகரித்துள்ளது. ஆண்டிபட்டி-தெப்பம்பட்டி, ஆண்டிபட்டி-ஏத்தக்கோயில், ஆண்டிபட்டி-மேக்கிளார்பட்டி வழி ஏத்தக்கோயில், ஆண்டிபட்டி-புள்ளிமான்கோம்பை நெடுஞ்சாலை ரோடுகளின் இருபுறங்களிலும் அதிகப்படியான புளிய மரங்கள் உள்ளன. ரோட்டின் ஓரங்களில் உள்ள மரங்களின் மகசூல் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த ஊராட்சி நிர்வாகம் மூலம் டெண்டர் விடப்படும். கடந்த சில ஆண்டுகளாக போதுமான மழை இன்மை, குறிப்பிட்ட காலத்தில் பெய்யாத மழையால், புளிய மரங்களில் காய்ப்புத்தன்மை குறைந்து குத்தகைதாரர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. கடந்தாண்டு பெய்த தொடர்ச்சியான மழையால் ஆண்டிபட்டி, பிச்சம்பட்டி, குப்பாம்பட்டி, கோத்தலூத்து, கன்னியப்பபிள்ளைபட்டி, கொத்தப்பட்டி, கதிர்நரசிங்கபுரம், ராஜதானி, தெப்பம்பட்டி உட்பட பல பகுதிகளில் உள்ள மரங்களில் காய்கள் கொத்துக்கொத்தாக காய்த்துள்ளன. இன்னும் சில நாட்களில் பழங்களாக பழுத்துவிடும்.

ஊராட்சி நிர்வாகத்தினர் கூறியதாவது: கடந்த நான்கு ஆண்டுகளாக புளிய மரங்களில் காய்ப்புத்தன்மை இல்லை.

எதிர்பார்த்த மகசூல் இல்லாததால் குத்தகைதாரர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இந்தாண்டு மகசூல் அதிகம் கிடைக்க வாய்ப்புள்ளது. மரங்களில் இருந்து பறித்து

சமையலுக்கான புளியாக்கும் வரை கூலியாட்களின் செலவு அதிகமாகி விடுகிறது. இருப்பில் வைத்து விற்பனை செய்யும் மொத்த வியாபாரிகள்தான் பலனடைவர், என்றனர்.

## கறவை மாடுகள் வளர்ப்பு பயிற்சி முகாம்

தேனி;தேனி உழவர் பயிற்சி மையத்தில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மாவட்ட விவசாய சங்க உறுப்பினர்களுக்கு நவீன முறையில் கறவை மாடுகள் வளர்ப்பு ஆலோசனை பயிற்சி முகாம் நடந்தது. நபார்டு வங்கி பொது மேலாளர் ரவீந்தரநாத் தலைமை வகித்தார். மாவட்ட வளர்ச்சி மேலாளர் வெங்கட் ரமணா முன்னிலை வகித்தார். உழவர் பயற்சி மைய தலைவர் செந்தில்குமார் வரவேற்றார். "அசோலா' பசுந்தீவன உற்பத்தி, தாது உப்புக்கள் (கலவை) பற்றாக்குறையால் ஏற்படும் நோய்கள், கறவை மாடுகளின் உணவு, பழக்கம் உள்ளிட்டவைகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. மாவட்டத்தை சேர்ந்த ஏராளமான விவசாய சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர். உதவிப் பேராசிரியர் பாலமுருகன் நன்றி கூறினார்.

## பால் உற்பத்தியாளர் கூட்டம்

சேலம்: சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய சிறப்பு பொது உறுப்பினர் கூட்டம் நடந்தது. கூட்டுறவு பணியாளர்களுக்கு, ஒன்றியத்திலிருந்து பணி வழங்க, துணை விதியை மாற்றுவது குறித்து, சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய கூட்டம் நடந்தது. இதில், ஒன்றிய தலைவர் சின்னுசாமி தலைமை வகித்தார்.

ஆவின் பொதுமேலாளர் சாந்தி பேசியதாவது: இங்கு பேசிய பலரும், பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, பணிகளில் ஒதுக்கீடு ஆகியவை குறித்து கோரிக்கை வைத்தனர். நானும் ஒரு பால் உற்பத்தியாளர் மகளாக இருந்தே, போட்டித்தேர்வு எழுதி, இந்நிலைக்கு வந்துள்ளேன். போட்டித்தேர்வு மூலம் உற்பத்தியாளர்களின்

குழந்தைகளும் எளிதில் பணியினை பெற முடியும். மற்ற கோரிக்கைகள் குறித்து பரிந்துரை செய்யப்படும். இவ்வாறு அவர் பேசினார். சேலம் மாவட்டத்திலிருந்து, 500க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு வாடகைக்கு கருவி:3 மையங்கள் ஏற்படுத்த திட்டம்

சிவகங்கை;மாவட்டத்தில்,மானாவாரி, ஆற்று பாசனம் மூலம் 67 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் நெல் நடவு செய்து வருகின்றனர். இது தவிர, கரும்பு, பயறு வகைகள், பூச்செடிகள், காய்கறிகள் விளைச்சலில் ஒரு லட்சம் எக்டேர் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது நிலங்களை உழவு செய்யவும், நெல் நடவு, நாற்று பறித்தல் போன்று இயந்திரங்கள் மூலம் விவசாய பணிகளை மேற்கொள்ள, கூடுதல் வாடகை செலுத்தி தனியாரிடம் விவசாய கருவிகளை வாங்கி பயன்படுத்துகின்றனர். பயிர் அறுவடையின் போது கிடைக்கும் பணத்தில், நடவு செலவிற்கே அதிகளவில் செலவிடப்படுகின்றன.

இதை தவிர்க்க, அரசே குறைந்த வாடகைக்கு விவசாய கருவிகளை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். விவசாயிகள் குழுக்களை ஏற்படுத்தி, அவர்களுக்கு அரசின் மானியத்தில் டிராக்டர், பவர் டிரில்லர், களையெடுக்கும் கருவி, அறுவடை கருவி உட்பட எட்டு வகையான விவசாய கருவிகள் வழங்கி, அவற்றை விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விட்டு பயன்பெறும் நோக்கில், தேசிய விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் 3 இடங்களில் விவசாய கருவிகள் வாடகை மையம் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி, தேவகோட்டை ஒன்றியத்தில் கண்டதேவி, கண்ணங்குடி ஒன்றியத்தில் தேர்போகி, சாக்கோட்டை ஒன்றியத்தில் கழனிவாசல்

ஆகிய மூன்று இடங்களில் விவசாய குழுக்களை ஏற்படுத்தி, அக்குழுவிற்கு விவசாய கருவிகளை வழங்கி, மற்ற விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் திட்டத்தை செயல்படுத்த உள்ளனர்.

விவசாய அதிகாரி ஒருவர் கூறுகையில், "வேளாண்மை பொறியியல் துறை சார்பில், விவசாய குழுவிற்கு ரூ.25 லட்சம் மதிப்புள்ள விவசாய கருவிகள் வழங்கப்படும். இதில், அரசு மானியமாக குழுவிற்கு ரூ.10 லட்சம் கிடைக்கும். எஞ்சிய ரூ.15 லட்சத்தை விவசாய குழு தந்தால், கருவிகள் வழங்கப்படும். அவற்றை குறைந்த வாடகைக்கு விட்டு விவசாய பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கலாம். இத்திட்டம், இம்மாத இறுதியில் மூன்று இடங்களில் துவக்கப்படும்," என்றார்.

**விவசாயிகளுக்கு மானியம்**

சிங்கம்புணரி: சிங்கம்புணரி வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் மை உற்பத்தி திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

இறவை பாசனத்தில் 200 ஏக்கர் டி.எம்.வி.10 .வி.ஆர்.ஐ.2, 6.ரக நிலக்கடலை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் ஏக்கருக்கு 400 கிலோ சிப்சம் கடையில் வாங்கி பில்லை வேளாண்மை வளர்ச்சி மையத்தில் கொடுத்தால் 50 சதவீதம் பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.தேசிய எண்ணெய் வித்துஉற்பத்தி திட்டத்தில் களைக்கொல்லி மருத்துக்கு ஏக்கருக்கு ரூ 200 மானியம் உண்டு.சிறு தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ் கம்பு, சோளம், ராகி, தினை, சாமை பயிர்களுக்கு ஏக்கர் 1க்கு 12.5. கிலோ நுண்நூட்டம் வேளாண்மை வளர்ச்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.விவசாயிகள் சிங்கம்புணரி வேளாண்மை வளர்ச்சி மையத்தை தொடர்பு கொள்ளுமாறு உதவி இயக்குனர் கார்த்தி கேயன் தெரிவித்தார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

## 50 ஆண்டுக்குமுன் தடை செய்த பருப்பு உற்பத்திக்கு அனுமதி



புது டெல்லி: இறக்குமதியை குறைக்கவும், உள் நாட்டில் நிலவும் பருப்பு பற்றாக்குறையை சமாளிக்கும் நோக்கத்துடன் 50 ஆண்டுகளுக்கு முன்பு தடை செய்யப்பட்ட தடினமான 3 வகை பருப்பு உற்பத்திக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. பக்கவாதம், நரம்பு கோளாறுகளை ஏற்படுத்துவதாக கூறி சில ரக பருப்புகளை பயிரிட 50 ஆண்டுகளுக்கு தடை விதித்தது. சமையலில் முக்கியமாக இருக்கும் துவரை, கடலை மற்றும் பாசிப் பருப்புகளின் விலை நாட்டில் இப்போது விண்ணை தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதற்கு பருவ மழைபொய்ப்பு, உற்பத்தி குறைவு, பயிரிடப்படும் நிலங்களின் அளவு குறைவு போன்றவை காரணங்களாக கூறப்படுகின்றன. பற்றாக்குறையை சமாளிக்க தான்சானியா, மியான்மர். கனடா, ஆஸ்திரியா போன்ற நாடுகளில் இருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வருகிறோம். இறக்குமதியை குறைக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும், முன்பு

தடை

செய்யப்பட்ட சற்று பெருமனான வகையில் உள்ள மூன்று வகை பருப்புகளை மீண்டும் பயிரிட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த பருப்புகள் மனித உபயோகத்திற்கு ஏற்றவை என்றும், தீங்கு விளைவிக்காதவை என்றும் இந்திய வேளாண் ஆய்வு கழகம் தெரிவித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன்சிங் கூறியுள்ளார். கேசரி வகை பருப்பு உற்பத்தி ஆண்டுக்கு 3.5 லட்சம் டன் ஆக இருக்கும் மதிப்பிடப்பட்டுள்ளது. சாம்பார், தால் போன்றவை தயாரிக்க உதவும் இந்த பருப்பின் பயன்பாடு ஆண்டுக்கு 2.20 கோடி டன் ஆக உள்ளது. இதில் 5ல் 1 பங்கு இறக்குமதியாகிறது.

**ஏரி, குளம், கண்மாய்களை முறையாகத் தூர்வார வேண்டும்**

திருமயம், : புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், அரிமளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய திருமயம் தாலுகாவில் உள்ள பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரி, குளம், கண்மாய்கள் நீண்டகாலமாக முறையாகத் தூர்வாரப் படவில்லை. இதே போல், இவற்றுக்கான வரத்து வாய்க்கால்களும் முறையாகத் தூர்வாரி ஆண்டுகணக்கில் ஆகிறது. இதனால் பெரும்பாலான ஏரி, குளம், கண்மாய் மற்றும் வரத்து வாரி உள்ளிட்ட நீர்நிலைகள் தூர்ந்துபோகின. மேலும், முறையான பராமரிப்பின்றி சீமைகருவேல மரங்கள் மற்றும் முட்செடிகள் அடர்ந்து வளர்ந்து புதர் மண்டிய நிலைக்கு மாறின. இதனால் வடகிழக்குப் பருவமழை காலத்தில் பலத்த மழை கொட்டித் தீர்த்த போதும் நீர்நிலைகளில் முழுமையாகத் தண்ணீரை தேக்கிவைக்க முடியாத துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, நீர்நிலைகளில் சீமை கருவேலமரங்கள், நெட்டி செடிகள், கோரை புல் ஆகியன அதிக அளவில் வளர்ந்து நின்று மழைநீரை முழுமையாக உறிஞ்சி நீர்வள ஆதாரத்தை பாழ்படுத்துகின்றன. இதனால் நிரந்தரமாக ஏரி மற்றும்

குளங்களிலும் உள்ள தண்ணீரை முழுமையாக பயன்படுத்த முடியவில்லை என்று பாசன விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தற்போது மழைக் காலம் முடிந்து வெயில் காலம் துவங்க உள்ளது. கோடையின் போது ஏரி, குளம், கண்மாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் உள்ள தண்ணீர் முழுமையாக தண்ணீர் வற்றிவிடும். எனவே, இனிவரும் காலத்திலாவது மழை நீரை முழுமையாகத் தேக்கிவைத்து பாசனத்துக்கும் மற்றும் பல்வேறு பயன்பாட்டுக்கும் உதவும் வகையில் பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டின் கீழ் ஏரி, குளம், கண்மாய்கள், வரத்துவாரிகள் உள்ளிட்டவற்றை உயர் அதிகாரிகள் நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முறையாகத் தூர்வார தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கண்மாய் கரைகளையும் உயர்த்த வேண்டும் என்று தமிழர் பாதுகாப்பு சங்கப் பேரவை தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இதே போல், ஊராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சிறிய குளங்கள், ஏரிகளையும் முறையாகத் தூர் வாருவதோடு ஏரி, குளம், கண்மாய், வரத்து வாய்க்கால்களையும் ஆழப்படுத்தி சீரமைக்க வேண்டும். குறிப்பாக, திருமயம்- புதுக்கோட்டை சாலையில் அமைந்துள்ள தாமரைக் கண்மாயில் மரம் போல் வளர்ந்து நிற்கும் நெட்டி செடிகள், தொடர்ந்து நீரை உறிஞ்சிகொண்டு வருகின்றன. எனவே, இதுபோன்ற நிலை வருங்காலத்தில் தொடர்வதை தடுத்திட நெட்டிசெடிகள் மற்றும் கோரைபுல்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்று தமிழர் பாதுகாப்பு சங்கப் பேரவை சார்பில் அதன் மாநிலத் தலைவரான புதுக்கோட்டையைச் சேர்ந்த பொறியாளர் பழனியப்பன், துணைத் தலைவரான முகவை கண்ணன், பொதுச் செயலாளரான சோக.ராமச்சந்திரன், நிர்வாகியான மதுரை செந்தாமரைச்செல்வம் ஆகியோர் அரசுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.

**இலவச நான்கு ஆடுகள் 10 ஆக உயர்வு இதுவரை 233 பேருக்கு கூடாரம் பரிசு கால்நடை துறை அதிகாரி தகவல்**

திண்டுக்கல், : இலவச ஆடுகளை வளர்த்து எண்ணிக்கையை பெருக்கியவர்களுக்கு ரூ.1.35 லட்சம் மதிப்பில் இலவசமாக கூடாரம் அமைத்துத் தரப்படுகிறது. மாவட்டத்தில் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 233 பேர் பயனடைந்துள்ளனர். கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ஏழ்மையானவர்களுக்கு இலவச ஆடுகள் வழங்கப்படுகிறது. இதில் விதவையர், கணவரால் கைவிடப் பட்டோர் போன்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வழங்கப்படும் ஆடுகளுக்கு முறையான மருத்துவ சிகிச்சை அளித்து கண்காணித்து அவற்றை வளர்த்து பொருளாதார ரீதியாக மேம்பட்டுள்ளார்களா என்பதை ஆய்வு செய்வது வழக்கம்.இதன்படி இணை இயக்குநர் ராஜேந்திரன் ரெட்டியார்சத்திரம் அம்மாபட்டி கிராமத்தைச் சேர்ந்த பயனாளிகளைச் சந்தித்து ஆய்வு செய்தார். கால்நடை வளர்ப்பில் ஏற்படும் பிரச்னை, அவற்றை சரிசெய்வதற்கான முறைகள் குறித்து விளக்கிக் கூறினார்.பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: ‘‘இலவச ஆடுகளை வளர்த்து 10 ஆடுகளாக உயர்த்தியவர்களுக்கு ரூ.85 ஆயிரம் மதிப்பிலும், 20 ஆடுகளாக அதிகரித்துள்ளவர்களுக்கு ரூ.1.35 லட்சம் மதிப்பில் பாதுகாப்பு கம்பிகளுடன் தகர கூரைசெட் இலவசமாக அமைத்துத் தரப்படுகிறது. இதற்காக பயனாளிகள் தலா 100,200 சதுரஅடிஇடத்தை ஒதுக்கித்தர வேண்டும்.

இதன்மூலம் மழை வெயிலுக்கு ஆடுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைத்துக்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இதுவரை 25 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.32.94 கோடியில் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. அதில் 233 பேருக்கு இலவச கூடாரம் அமைத்துத் தரப்பட்டுள்ளது’’ என்றார்.உடன் செய்திமக்கள்

தொடர்பு அலுவலர் சாலிதளபதி, உதவிஇயக்குநர் அப்துல்காதர், டாக்டர்கள் தங்கவேல், முத்துச்சாமிபாண்டியன் ஆகியோர் இருந்தனர்."நக்சலைட்டுக்கு பிப்.3வரை காவல் நீட்டித்து உத்தரவுதிண்டுக்கல், : கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த 2008ல் துப்பாக்கி பயிற்சி பெற்ற நக்சலைட்டுகளுக்கும், போலீசாருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது.

இதில் நக்சலைட் நவீன் பிரசாத் போலீசாரால் சுட்டு கொல்லப்பட்டான். கொடைக்கானல் போலீசார் தப்பியோடியவர்களை தேடி வந்தனர். இதுதொடர்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு வடமதுரையில் நக்சலைட் நீலமேகத்தை கைது செய்து திருச்சி சிறையில் அடைத்தனர். இவ்வழக்கின் விசாரணைக்காக நேற்று நீலமேகத்தை திண்டுக்கல் கோர்ட்டில் போலீசார் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் வேதகிரி, நீலமேகத்திற்கு வரும் பிப்.3ம் தேதி வரை காவல் நீட்டிப்பு செய்து உத்தரவிட்டார்

இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டுப்பாளையத்தில் வரலாறு காணாத மழை பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு



மேட்டுப்பாளையம்

மேட்டுப்பாளையம் பகுதியில் வரலாறு காணாத வகையில் விடிய விடிய கனமழை பெய்தது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேட்டுப்பாளையம்-ஊட்டி சாலையில் ராட்சத மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

220மி.மீட்டர்மழை

கோவை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பனிப்பொழிவு அதிகமாக இருந்தது. இதனால் காலை நேரத்தில் சாலைகளில் செல்லும் வாகனங்கள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டு சென்றன. மேலும், கடுங்குளிர் காரணமாக பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். கடந்த 2 நாட்களாக பனியின் தாக்கம் குறைந்து தட்ப வெப்பநிலையில் மாற்றம் ஏற்பட்டது. இந்த நிலையில் கோவையை அடுத்த மேட்டுப்பாளையம், கல்லார் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி களில் நேற்று முன்தினம் இரவு 11.30மணி அளவில் கனமழை பெய்ய தொடங்கியது. அந்த கனமழை நேற்று காலை 10 மணி வரை தொடர்ந்து பெய்தது. இதனால் ஒரே நாளில் 220 மி.மீட்டர் மழை பதிவானது.



ராட்சத மரம் விழுந்தது வரலாறு காணாத வகையில் விடிய, விடிய கொட்டித்தீர்த்த கனமழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த பலத்த மழை

காரணமாக பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆற்றின் இருகரைகளையும் தொட்டபடி வெள்ளம் சீறிப்பாய்ந்ததுடன், கரையோரம் உள்ள பவானி அம்மன் கோவிலையும் வெள்ளம் சூழ்ந்தது. அதேபோல் கல் லார் பகுதியில் உள்ள பாக்கு தோப்புகளில் மழை வெள்ளம் தேங்கி நின்றது. மேலும், கனமழை காரணமாக மேட்டுப்பாளையம்-ஊட்டி சாலையில், தூரிப்பாலம் அருகே நேற்று அதிகாலை ராட்சத மரம் வேரோடு நடுரோட்டில் விழுந்தது. இதன்காரணமாக அந்த பகுதியில் போக்குவரத்து அடியோடு பாதிக்கப்பட்டு வாகனங்கள் நீண்டவரிசையில் அணிவகுத்து நின்றன.. அகற்றப்பட்டது

இது குறித்த தகவல் அறிந்ததும் மேட்டுப்பாளையம் போலீசாரும், தீயணைப்பு அலுவலர் நாகராஜ் தலைமையில் தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் பொதுமக்கள் உதவியுடன், நடுரோட்டில் சாய்ந்து கிடந்த மரத்தை மின்சார ரம்பத்தால் வெட்டி அகற்றினர். இந்த பணி காலை 8 மணிக்கு தொடங்கி 9.30 மணி வரை நீடித்தது. இதையடுத்து போக்குவரத்து சீரானது. இந்த மழை காரணமாக மேட்டுப்பாளையம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

நீலகிரி

நீலகிரி மாவட்டம் கூடலூர், முதுமலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு தொடங்கி விடிய விடிய மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் கரைபுரண்டு ஓடியது. கூடலூரில் 16 மி.மீட்டரும், தேவாலாவில் 3 மி.மீட்டரும் மழை அளவு பதிவாகி உள்ளது. இந்தநிலையில் நேற்று மாலை 4 மணிக்கு கூடலூர் அருகே கீழ்நாடுகாணியில் சாலையோரம் நின்றிருந்த ராட்சத மரம் ஒன்று விழுந்தது. இதனால் அந்த சாலையில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து

சென்று அந்த மரத்தை வெட்டி அகற்றினர். இதனால் அப்பகுதியில் 1½ மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஊட்டியில் நேற்று காலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மேலும் லேசான மழையும் பெய்ததால் சுற்றுலா பயணிகள் சிரமத்துக்கு ஆளானார்கள். இதனால் அவர்கள் கம்பளி ஆடைகளை அணிந்தபடி சுற்றுலா தலங்களில் வலம் வந்தனர். கடுங்குளிர் காரணமாக காலை நேரத்தில் பள்ளி செல்லும் மாணவ-மாணவிகளும் மிகவும் சிரமம் அடைந்தனர். குன்னூரில் சாரல் மழை பெய்தது. இதனால் சிம்ஸ்பூங்காவில் சுற்றுலா பயணிகள் கூட்டம் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

## கோவை வர்த்தக மையத்தில் ரூ.2¾ கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம்



கோவை

கோவை வர்த்தக மையத்தில், ரூ.2¾ கோடிக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.

கோவை வர்த்தக மையம்

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத் தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி இந்த ஆண்டுக்கான 3–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

தேயிலைத்தூள் ஏலம்

2 லட்சத்து 17 ஆயிரத்து 489 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 1 லட்சத்து 87 ஆயிரத்து 753 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 86 சதவீதம். இதன் ஏல மதிப்பு ரூ.1 கோடியே 88 லட்சத்து 12 ஆயிரத்து 850 ஆகும். இதில் 29 ஆயிரத்து 736 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது.

ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 100 ரூபாய் 20 காசு ஆகும். இது கடந்த வாரம் 97 ரூபாய் 49 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 2 ரூபாய் 71 காசு விலை அதிகரித்து உள்ளது. இதேபோல் கடந்த வாரம் 3 ரூபாய் 95 காசு விலை அதிகரித்து இருந்தது. இதன் மூலம் தேயிலைத்தூள் விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.

இலைரக தேயிலை

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 10 ஆயிரத்து 931 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 97 ஆயிரத்து 951 கிலோ ஏலம் போனது. இது 88 சதவீதம். இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.90 லட்சத்து 82 ஆயிரத்து 16 ஆகும்.

ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 92 ரூபாய் 72 காசு ஆகும். இது கடந்த வாரம் 89 ரூபாய் 62 காசாக இருந்தது. 3 ரூபாய் விலை அதிகரித்து உள்ளது. இதன்மூலம் இலைரக தேயிலையின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ரூ.2¾ கோடிக்கு ஏலம்

இந்த ஏலத்தில் 2 லட்சத்து 85 ஆயிரத்து 704 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை விற்பனையாகி உள்ளது. 42 ஆயிரத்து 716 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 78 லட்சத்து 94 ஆயிரத்து 866 ஆகும்.

இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.

## பயிர் சாகுபடிக்கு போதுமான அளவு உரம் இருப்பு உள்ளது வேளாண் இணை இயக்குனர் தகவல்



மதுரை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள நெல் மற்றும் இதர பயிர்களுக்கு தேவைப்படும் உரங்கள் போதிய அளவு கையிருப்பு உள்ளதாக வேளாண் இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

சாகுபடி

மதுரை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கனகராஜ் மற்றும் உதவி

இயக்குநர் சுருளிபொம்மு ஆகியோர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறி இருப்பதாவது:-

மதுரை மாவட்டத்தில் தற்போது 40 ஆயிரத்து 414 எக்டர் பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. சிறுதானியம் 25 ஆயிரத்து 831 எக்டர் பரப்பிலும், பயறு வகை 10 ஆயிரத்து 44 எக்டர் பரப்பிலும், எண்ணெய் வித்துக்கள் 2 ஆயிரத்து 649 எக்டர் பரப்பிலும், கரும்பு 2 ஆயிரத்து 544 எக்டர் பரப்பிலும்பயிரிடப்பட்டுள்ளன.

நெல் பயிர் முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக மேலுரம் இடும் நிலையில் உள்ளது. எனவே, மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தலின்படி விவசாயிகளுக்கு அரசு நிர்ணயம் செய்த விலையில் உரங்கள் விற்பனை செய்வதற்காக தனியார் கடைகளில் யூரியா 4 ஆயிரத்து 150 டன், டி.ஏ.பி. ஆயிரத்து 74 டன், காம்ப்ளக்ஸ் உரம் ஆயிரத்து 856 டன் என்ற அளவில் இருப்புஉள்ளது.

நடவடிக்கை

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் யூரியா ஆயிரத்து 950 டன், டி.ஏ.பி. 290 டன், காம்ப்ளக்ஸ் 758 டன் என்ற அளவிலும் இருப்பில் உள்ளது.

விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக இருப்பில் வைக்கப்பட்டுள்ள உர மூடைகளில் அச்சிடப்பட்டுள்ள விலையில் விவசாயிகள் உரத்தை வாங்கிக் கொள்ளலாம். தனியார் உரக்கடைகளில் உரங்களின் விற்பனை இருப்பு விவரம் கடையின் முன்பு இருத்தல் வேண்டும்.

விவசாயிகள் இடுபொருள் வாங்கும் போது காலாவதி தேதியை பார்த்து வாங்க வேண்டும். கடைக்காரர்கள் காலாவதியான பூச்சி மருந்துகளையோ, பயிர் ஊக்கிகளையோ விவசாயிகளுக்கு விநியோகம்

செய்யக் கூடாது. அவ்வாறு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் பூச்சி மருந்து சட்டத்தின்படி நடவடிக்கைஎடுக்கப்படும்.

புகார்தெரிவிக்கலாம்

உரம் விற்பனையாளர்கள் அனுமதி பெற்ற நிறுவனங்களிடம் இருந்து மட்டுமே உரங்களை கொள்முதல் செய்ய வேண்டும். மேலும், மதுரை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உரங்களை வேறு மாவட்டங்களுக்கு விற்பனை செய்யக்கூடாது. விவசாயிகள் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தொடர்பான புகார்களை 99944 07172 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றிலை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி



பரமத்தி வேலூர் வெற்றிலை ஏல சந்தையில் வெற்றிலை விலை உயர்ந்து உள்ளது. இதனால் வெற்றிலை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி

அடைந்துஉள்ளனர்.

வெற்றிலைபயிரீடு

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு உள்ளது. இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகா, கேரளா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும்,சேலம், கோவை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதிசெய்யப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த வாரம் இந்த பகுதியில் நடைபெற்ற வெற்றிலை ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை இளம்பயிர் மார் 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.5 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்திற்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை முதியம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.3 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை முதியம் மார் ரூ.ஆயிரத்திற்கும் ஏலம் போனது.

விலைஉயர்வு

நேற்று நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை இளம்பயிர் மார் 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.10 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.4,500-க்கும், வெள்ளைக்கொடி வெற்றிலை முதியம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.4 ஆயிரத்திற்கும், கற்பூரி வெற்றிலை முதியம்பயிர் மார் சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. கடும் பனிப்பொழிவின் காரணமாகவும்,

நோய் தாக்குதல் காரணமாகவும் வெற்றிலை உற்பத்தி குறைந்துள்ளது. இதன் காரணமாக வெற்றிலையின் விலை உயர்வடைந்து உள்ளதாக வெற்றிலை பயிரிட்டு இருந்த விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். மேலும் வெள்ளைக்கொடி வெற்றிலை இளம்பயிர் மார் 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.10 ஆயிரத்திற்கு விலை போவது இதுவே முதல் முறை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## மழையால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண நிதி குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் தகவல்



நெல்லை,

பலத்த மழையால் பயிர்களை இழந்து பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண நிதி வழங்கப்படும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

<u>குறை தீர்க்கும் கூட்டம்</u>

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நெல்லை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் மு.கருணாகரன் தலைமை தாங்கினார்.

வேளாண்மைத்துறை இணை இயக்குனர் (பொறுப்பு) பெருமாள், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வெங்கட கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:–

<u>பயிர்கள் சேதம்</u>

விவசாயிகள்:– நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழையால் ஏராளமான பயிர்கள் சேதமடைந்துவிட்டன. இதுபற்றி உரிய கணக்கெடுப்பு நடத்தவில்லை. இதுவரை நிவாரணம் வழங்கவில்லை. எனவே சேதம் அடைந்த பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

கலெக்டர்:– ஏற்கனவே கணக்கெடுக்கப்பட்டு உள்ளது. கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவமழையால் 5 ஆயிரத்து 510 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்த பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. மொத்தம் 10 ஆயிரத்து 821 விவசாயிகள், தங்களது பயிர்களை இழந்துள்ளனர். ரூ.4 கோடியே 88 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை கொடுத்து இருக்கிறோம்.

ரூ.2 கோடியே 21 லட்சம் நெல்லை மாவட்டத்துக்கு நிவாரண நிதியாக வந்துள்ளது. அந்த நிதியை விரைவில் விவசாயிகளுக்கு கொடுப்போம். மீதி நிதி வந்தவுடன் மற்ற விவசாயிகளுக்கும் கொடுக்கப்படும்.

<u>பயிர் கணக்கெடுக்க லஞ்சம்</u>

விவசாயிகள்:– சில இடங்களில், சேதம் அடைந்த பயிர்களை கிராம நிர்வாக அதிகாரிகள் கணக்கெடுத்துள்ளனர். ஆனால் பயிர் கணக்கெடுக்க தலையாரிகள் ரூ.1000 லஞ்சம் கேட்கிறார்கள்.

கலெக்டர்:– யாராவது லஞ்சம் கேட்டால் எங்களுக்கு தகவல் கொடுங்கள். விசாரணை செய்கிறோம். அவர்கள் லஞ்சம் கேட்டது உறுதி செய்யப்பட்டால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள்:– மழை வெள்ளம் பாதித்த பகுதியில் வருவாய்த்துறை அதிகாரிகள், வேளாண்மைத்துறை அதிகாரிகள், தோட்டக்கலை துறை அதிகாரிகள் என பல துறையினர் வந்து கணக்கெடுக்கிறார்கள். இதனால் குழப்பமாக இருக்கிறது. ஏதாவது ஒரு துறையில் இருந்து முழுமையாக கணக்கெடுக்க உத்தரவிட வேண்டும்.

கலெக்டர்:– இதுபற்றி அதிகாரிகளிடம் ஆலோசனை செய்து முடிவு செய்யப்படும்.

<u>கோவில் நிலங்கள்</u>

விவசாயிகள்:– சுப்பிரமணியபுரம், கீழ ஆம்பூர் பகுதியில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோவில் நிலங்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் குத்தகை தொகை செலுத்தி வருகிறார்கள். அதற்கான ரசீது வழங்கப்பட்டு உள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக அங்கு இருக்கும் விவசாயிகளை வெளியேற்ற முயற்சி நடக்கிறது. இதுதொடர்பாக கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அந்த பகுதியில் மொத்தம் 1,800 விவசாயிகள் உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த பிரச்சினையில் தாங்கள் தலையிட்டு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும்.

கலெக்டர்:– இதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>நெல் கொள்முதல் நிலையம்</u>

விவசாயிகள்:– திருக்குறுங்குடி சுற்று வட்டார பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. ஒரு மாதத்தில் அறுவடை செய்யும் நிலையில் பயிர்கள் உள்ளன. எனவே திருக்குறுங்குடியில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும்.

கலெக்டர்:– இதுபற்றி வேளாண்மைத்துறை அதிகாரியிடம் கேட்டு முடிவு செய்யப்படும்.

விவசாயிகள்:– ஒரு சில இடங்களில் சேதமடைந்த பயிர்களை கணக்கெடுக்கவில்லை. கேட்டால் தரிசு நிலம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். தரிசு நிலத்தில் எப்படி பயிர் விளையும்? சேதமடைந்த காணம் (கொள்ளு) பயிர்களை கணக்கெடுக்க அதிகாரிகள் மறுக்கிறார்கள். (அப்போது அவர் சேதமடைந்த பயிரை காட்டினார்).

இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந்தது.

<u>கண்காட்சி</u>

விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தையொட்டி வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கம் முன்பு வேளாண் கருவிகள் கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தன.

## அரசின் மானியங்கள் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை



உடுமலை தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை ஆகியவற்றின்கீழ் வழங்கப்படும் அரசின் மானியங்கள், அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டும் என விவசாயிகள் ஆர்.டி.ஓ.விடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உடுமலை தாலுகா அலுவலகத்தில் ஆர்.டி.ஓ.சாதனைக்குறள் தலைமையில் நேற்று நடைபெற்றது.கூட்டத்தில் தாசில்தார்கள் தயானந்தன் (உடுமலை), பழனியம்மாள்(மடத்துக்குளம்), ஆர்.டி.ஓ.–வின் நேர்முகஉதவியாளர் விவேகானந்தன் ஆகியோர் முன்னிலைவகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:–

விஜயசேகர் (விவசாயி):– பி.ஏ.பி.பாசனத்திட்டத்தின் 4–ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதில் சில இடங்களில் தண்ணீரை முறைகேடாக பயன்படுத்துகின்றனர். இதுகுறித்து அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை. புகார் தெரிவித்த எனக்கு தான்(விஜயசேகருக்கு) செல்போனில் மிரட்டல் வருகிறது. இதுகுறித்து போலீசிலும் கூறியுள்ளேன். இதனால் என்னுடைய உயிருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

வேலாயுதம் (விவசாயி):– தேங்காய்பாலை சத்துணவுத்திட்டத்தில் சேர்க்க பரிந்துரைசெய்ய வேண்டும்.

கனகராஜ் (விவசாயி):– தேவனூர் புதூரில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இந்த பணிக்கு மின் திட்ட பணியாளர்கள் சென்று விடுகின்றனர். இதனால் மின்மாற்றி பராமரிப்பு, மின்பழுது ஆகியவற்றிற்கு மின் பணியாளர்கள் வரமுடியாத நிலை உள்ளது.

உதவிசெயற்பொறியாளர்:– துணைமின் நிலையம் அமைக்கும் பணி இன்னும் 15 நாட்களில் முடிந்துவிடும். அதன் பின்னர் பணியாளர்கள் பற்றாக்குறை இருக்காது.

தூர்வார வேண்டும்

பாலதண்டபாணி(மருள்பட்டி):– பி.ஏ.பி.முதல் மண்டல பாசனத்திற்கு விரைவில் தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.ஆனால் பல கிளை வாய்க்கால்கள் இன்னும் தூர்வாரப்படாமல் உள்ளது.இப்போது வறட்சி நிலவுவதால் திருமூர்த்தி அணையிலிருந்து திறந்து விடப்பட உள்ள தண்ணீர் முதல் மண்டலபாசனத்தின் கடைமடை வரை சென்றடையும் வகையில் கிளை வாய்க்கால்களை தூர்வார வேண்டும்.வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை ஆகியவற்றின் கீழ் வழங்கப்படும் மானியங்கள், அந்த துறைகளுடன் அடிக்கடி தொடர்பு வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.எனவே அரசின் மானியங்கள் குறிப்பிட்ட விவசாயிகளுக்கு மட்டும் செல்லாமல், அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் பரவலாக்கப்பட வேண்டும். சாதரண விவசாயிகளுக்கும் அரசின் மானியங்கள் கிடைக்க வழிவகை செய்யவேண்டும்.

செல்வராஜ், மகாலிங்கம் (வேளாண்மை துறை உதவி இயக்குனர்கள்):– இதுகுறித்து அனைத்து பதிவேடுகளும் சரிபார்க்கப்பட்டுள்ளன அரசின் மானியம் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

நடவடிக்கை எடுக்கப்படும்

எஸ்.ஆர்.மதுசூதனன்(விவசாயி):–துவரம் பருப்பு இப்போது கிலோ ரூ.120, ரூ.130–க்கு விற்பனையாகிறது. ஆனால் விவசாயிகளிடமிருந்து ரூ.60, ரூ.70 மட்டுமே கொள்முதல் செய்யப்படுகின்றன. அதனால் விவசாயிகளுக்கு உரியவிலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வி.சவுந்தரராஜன்(விவசாயி):– உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் கல்விக்கடன் கேட்டு சமூக பாதுகாப்புத்திட்ட அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்தால் சரியான பதில் கிடைப்பதில்லை. உடுமலை ஒன்றியத்தில் இந்திரா நினைவு குடியிருப்பு வீடு கட்ட அரசு ஒதுக்கப்பட்ட நிதியினை பயனாளிகளுக்கு உடனடியாக ஊராட்சி ஒன்றியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜல்லிப்பட்டியில் பி.ஏ.பி.கிளை வாய்க்கால் மடையை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாதனைக்குறள் (ஆர்.டி.ஓ.):– விவசாயிகள் கோரிக்கைகள், குற்றச்சாட்டுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விவசாயி விஜயசேகர் செல்போனுக்கு வந்த மிரட்டல் குறித்து விசாரிக்க போலீசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு விவாதம் நடந்தது. கூட்டத்தில் ஜல்லிபட்டி கோபால், வாளவாடி செந்தில்குமார், வி.எம்.துரைசாமி உள்பட பல்வேறு விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்தனர்.

## கரும்புக்கான நிலுவை தொகையை 10 நாட்களுக்குள் விவசாயிகளுக்கு வழங்கி முடிக்க வேண்டும் கலெக்டர் லட்சுமி உத்தரவு



விழுப்புரம்

கரும்புக்கான நிலுவை தொகையை 10 நாட்களுக்குள் விவசாயிகளுக்கு வழங்கி முடிக்க வேண்டும் என குறைகேட்பு கூட்டத்தில் கலெக்டர் லட்சுமி உத்தரவிட்டுள்ளார்.

<u>குறைகேட்பு கூட்டம்</u>

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மாதாந்திர விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கி விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றார். கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கலந்துகொண்ட விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகள் குறித்து பேசியதாவது:–

திருவெண்ணெய்நல்லூர் அருகே பெரியசெவலை, ஆமூர் உள்ளிட்ட பகுதிகளில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நிவாரணம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருவெண்ணெய்நல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கொண்டு வரப்பட வேண்டும். விளைபொருட்களை எடுத்துக்கொண்டு தொலைவில் உள்ள திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், பண்ருட்டி ஆகிய இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

<u>நேரடி நெல் கொள்முதல் நிலையம்</u>

செஞ்சி, உளுந்தூர்பேட்டை பகுதிகளில் கூடுதலாக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு வரலாறு காணாத வகையில் மழை பெய்துள்ளது. ஆனால் மழை ஓய்ந்து ஒரு சில நாட்களிலேயே ஆறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டன. தடுப்பணைகள் கட்டி தண்ணீரை சேமிக்காமல் தவறியதால் தண்ணீர் வீணாக கடலில் சென்று கலந்தது. இதற்கு பொதுப்பணித்துறையினரின் அலட்சியமே காரணம். பண்ருட்டி சாலையில் கண்டரக்கோட்டை பாலத்தின் அருகில் தடுப்பணை கட்ட பல ஆண்டுகளாக பொதுப்பணித்துறையினரிடம் முறையிட்டோம். ஆனால்

தடுப்பணை கட்டவில்லை. அந்த இடத்தில் தடுப்பணை கட்டியிருந்தால் தண்ணீரை ஓரளவிற்கு சேமித்து வைத்திருக்கலாம். அதிகாரிகள் மெத்தனப்போக்கோடு செயல்படாமல் வரும் காலங்களில் ஆறுகளில் தண்ணீரை சேமித்து வைக்க தடுப்பணையை கட்ட வேண்டும். அதுபோல் நீர்வரத்து வாய்க்கால்களையும் தூர்வார வேண்டும்.

மாவட்டத்தின் பல இடங்களில் ஏரிகளும், அதன் நீர்வரத்து வாய்க்கால்களும் ஆக்கிரமிப்பில் உள்ளது. அந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும். சிறுவந்தாடு ஏரிக்கு செல்லும் வாய்க்காலை 3–ல் ஒரு பங்கு தூர்வாரிவிட்டு ரூ.4 லட்சம் செலவாகிவிட்டது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அந்த 4 லட்சம் ரூபாயை விவசாயிகளிடம் கொடுத்தால் ஒட்டுமொத்த வாய்க்காலையும் தூர்வாரி விடுவோம்.

தற்போது மாவட்டத்தில் நிலமோசடிகள் அதிகமாக நடந்து வருகிறது. முறையாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்துவதில்லை. நிலமோசடியில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தாலுகா அலுவலகங்களில் முறையாக விண்ணப்பித்த அனைவருக்கும் பட்டா மாற்றம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நிலுவை தொகை

கரும்புக்கான நிலுவைத்தொகையான கோடிக்கணக்கான ரூபாயை தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் பல மாதங்களாக கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர். எத்தனையோ முறை காலஅவகாசம் வழங்கியும் எங்களுக்கு சேர வேண்டிய முழு தொகையும் வந்து சேரவில்லை. சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் பேசினார்கள்.

இதற்கு பதில்அளித்து கலெக்டர் லட்சுமி பேசுகையில், கரும்புக்கான நிலுவை தொகையை விவசாயிகளுக்கு வழங்க தனியார் சர்க்கரை ஆலை

நிர்வாகத்தினர் 10 நாட்கள் அவகாசம் கேட்டுள்ளனர். அந்த 10 நாட்களுக்குள் நிலுவை தொகையை விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகத்தினர் வழங்கி முடிக்க வேண்டும். அடுத்த ஒரு வாரத்திற்குள் இந்த ஆண்டு தொடங்கியுள்ள அரவை பருவத்திற்கான தொகையை கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் ஆலை நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மேலும் விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்தையும் படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் உறுதியளித்தார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ராதா, வேளாண் இணை இயக்குனர் ரத்தினசபாபதி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சந்திரசேகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) செல்வசேகர், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர்கள் கள்ளக்குறிச்சி சிவராஜ், விழுப்புரம் சீனிவாசன், முன்னோடி வங்கி மேலாளர் ராஜேந்திரன், வேளாண் துணை இயக்குனர் ராமலிங்கம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.